1975 அக்டோபர் 24]

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) Yes.

(*b*) It is under the consideration of Government.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 1-ம், 2-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பேரவையால் நிறைவேற்றப் பட்டு, இது அரசியலமைப்புச் சட்டத்தின் 199 வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS